தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

திங்கட்கிழமை, 1974 சனவரி 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

B.T. Headmasters in Middle and Elementary Schools.

*16 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have ordered the appointment of B.T. Headmasters in Middle and Elementary Schools during 1972–73; and

(*b*) if so, the number of such posts sanctioned for aided schools out of the total sanctioned?

நடுத்தர, தொடக்கப் பள்ளிகளில் பி.டி. தலைமை ஆசிரியர்கள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972–73-ஆம் ஆண்டில் நடுத்தர, தொடக்கப் பள்ளிகளில் பி.டி. தலைமை ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில், மானியம் பெறும் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட அத்தகைய பதவிகளின் எண்ணிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) தொடக்கக் கல்வியை விரிவாக்குவதற்கும் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் ஆன மைய அரசுத் திட்டத்தின் கீழ் 1972-73-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் 877

உயர்தொடக்கப் பள்ளிகளில் பி.டி. தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களுள் 58 பேர் தனியார் உயர்தொடக்கப்பள்ளிகளில் நியமிக்கப்பட்டோர் ஆவர். (தனியார் உயர்தொடக்கப் பள்ளிகளுக்கு 81 பி.டி. ஆசிரியர் பதவிகள் ஒதுக்கப்பட்ட போதிலும் அவை 58ஐ மட்டுமே பயன்படுத்தின.)

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த உயர் துவக்கப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்யும் போது, அந்தப் பள்ளியிலேயே இடைநிலை ஆசிரியர்களாக உள்ள பி.டி. ஆசிரியர்களில் ஒருவரை உயர்த்தி நியமனம் செய்ய அரசு ஏதேனும் உத்தரவு பிறப்பித்துள்ளதா? ஆமெனில் அதன்படி எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள்? இல்லாவிட்டால் அவ்வாறு செய்யாத நிறுவனங்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எவ்வளவு இடங்கள் ஒதுக்கப்பட்டனவோ அந்த அளவுக்கு பி.டி. தகுதி பெற்றவர்கள் இருப்பார்களேயானுல், அவர்களை அந்தப் பதவிக்கு உயர்த்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவோ, அத்தனை இடங்களுக்கு நியமனம் செய்யலாம். எந்த இடத்திலாவது அம்மாதிரியான உத்தரவு நிறைவேற்றப்படாமலிருந்தால், குறிப்பிட்டு அரசு கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஏற்கெனவே தலைமை ஆசிரியர்களாக உள்ளவர்கள், இதைப்பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் அனுப்பியிருக்கின்ருர்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேட் படித்திருக்கின்றவர்களை கூடுதல் தலைமை ஆசிரியர்கள் என்று போட்டிருக்கிருேம். வேறு எங்கேயேனும் தலைமை ஆசிரியர் பதவி காலியிருந்தால், அந்த இடத்திற்கு இவர்களை மாற்றுகிருேம். அவர்களுடைய சம்பளம், மற்ற சலுகைகள் எதிலும் இழப்பு ஏற்படாமல், கூடுதல் தலைமை ஆசிரியர் என்ற பெயர் கொடுக்கப்பட்டு, அந்தப் பெயரில் பணியாற்றி வருகிருர்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இது போன்று பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று குறிப்பாக உத்தரவு பிறப்பித்திருந்தும், திருச்சி மாவட்டத்தில் மூன்று பள்ளிகளில் அவ்வாறு நிறைவேற்றவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு பலமுறை இதுபற்றி எழுதியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று நான் அறிகிறேன்.

1974 சனவரி 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளுக்கு 81 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவைகளில் 58 இடங்களை மட்டுமே அவர்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர் என்ற குறிப்பு இருக்கிறது. ஆகவே எந்த வகையில் வேறு இடங்களுக்குப் போடவில்லை, அதற்கான காரணங்கள் என்ன என்பதற்கு என்னிடம் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால், விவரங்கள் கொடுக்க முடியும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த இடைநிலைப் பள்ளிகளில் தமிழில் முழுப்பயிற்சி பெற்றவர்கள் இன்னும் இடை நிலை ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள். அவர்களை தமிழ் ஆசிரியர்களாக நியமிக்கும் குறிப்பு அரசிடம் உண்டா? தமிழ் ஆசிரியர்களாக இருப்பதற்கு பூர்ண தகுதி பெற்றவர்கள் பலர் இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை தமிழ் ஆசிரியர்களாக நியமிக்க உத்தரவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது, அந்த உத்தேசமில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, நடுத்தர, தொடக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக பி.டி. பட்டதாரிகளை நியமிப்பது தொடர்ந்து செயல்பட்டு வருகிறதா? அப்படியானால் இவ்வாண்டும், சென்ற ஆண்டும் எவ்வளவு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு கொள்கை 1961-லிருந்து கையாளப்பட வேண்டுமென்று இருந்தாலும்கூட அது நிறைவேற்றப்படாமல் இருந்தது. 1971-72-ல் 313 இடங்களிலும், 1972-73-ல் 822 இடங்களிலும் பி.டி. ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் 1973-74-ல் மத்திய அரசால் விரிவுபடுத்தப்படாத காரணத்தால், இந்த ஆண்டு நிறைவேற்றப்படவில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, இடைநிலை ஆசிரியர்கள் பதவியில் தமிழ் ஆசிரியர்கள் பலர் இருந்து வருகிறார்கள். அவர்களைத் தமிழ் ஆசிரியர்களாகவே நியமிப்பதில் அரசாங்கத்திற்கு என்ன சங்கடம் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்கள் சேர்ந்தது இடைநிலை ஆசிரியர்களாகத்தான். அதற்குப் பிறகு அவர்களுடைய தகுதியை பல்வேறான வகையில் அவர்கள் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இடம் ஏற்பட்ட பிறகு தான் அவர்களை அந்த இடங்

களில் பொருத்த முடியும். இடம் ஏற்படுத்திக்கொண்டு, வேண்டுமானால், அவர்களைப் போடலாம். இடம் இல்லாமல் அவர்களை எப்படிப் போட முடியும்? கொள்கை வகுக்கப்படுகின்றது. பின்னால் இடம் ஏற்பட்டால் போடலாம். இப்பொழுது அந்த முயற்சி இல்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களாக நியமிப்பது என்று அரசு ஒத்துக்கொண்டு விட்டது. இடம் இருக்கின்ற இடங்களில் முதல் கட்டத்திலேயே தமிழ் ஆசிரியர்களாக நியமிப்பது என்பது இரண்டு பேருக்கும் சிறப்பாக இருக்காதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படி எத்தனை ஆசிரியர்கள், எந்தெந்தப் பள்ளிகளில் இருக்கலாம் என்று வரைமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்படுகின்ற சூழ்நிலையில் அங்கேயே இடைநிலை ஆசிரியர்களாக இருக்கின்றவர்கள் தமிழ் ஆசிரியர்களாக இருந்தால், அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த இடைநிலைப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களைப் போடலாம் என்று உத்தரவு இருக்கிறது. பி.டி. தலைமை ஆசிரியர்களும், பி.டி. ஆசிரியர்களும் இருக்கின்ற இடத்தில் தமிழ் பயிற்சி பெற்றவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். அந்த இடங்களில் தமிழ் ஆசிரியர்களுக்கு முதலிடம் கொடுக்கலாம் அல்லவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அவர்களுக்கு முதலிடம் கொடுத்துப் போடலாம். அந்த இடத்திலேயே வாய்ப்பு ஏற்படுகின்ற வரையில் அங்கேயே இருக்கலாம். வேறு எங்கேயாவது இருந்தால், அங்கே மாற்றுவதில் ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், கஷ்டம் இருக்காது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் ஆசிரியர்களும் பட்டதாரி ஆசிரியர்களும் சரி நிகரான அளவு சம்பளம் பெறுகிறார்கள். பட்டதாரி ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நடுநிலைப் பள்ளிகளில் நியமிப்பதுபோல், தமிழ் ஆசிரியர்களையும் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? ஆம் எனில், அந்த உத்தரவு எப்பொழுது பிறப்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப் பற்றி முடிவு எதும் இப்பொழுது எடுக்கவில்லை.

1974 சனவரி 21]

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் மாணவர்கள் இருக்கின்ற தொடக்கப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? தொடக்கப் பள்ளிகள் பலவற்றில் 500, 600-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கின்றார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது 5,000 க்கு மேற்பட்ட தொடக்கப்பள்ளிகள் இருக்கின்றன. அவைகளில் 1,190 பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகப் போடப்பட்டிருக்கின்றார்கள். அடுத்துப் போடுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் கூறியதைக் கவனத்தில் கொள்ளலாம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, தமிழக அரசு தமிழ் மொழியின் தரத்தை வளர்ப்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. இடை நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிப்பது தமிழ் மொழியை நல்ல முறையில் மாணவர்கள் பயிலுவதற்கும், தமிழை முறையாகப் பயன்படுத்துவதற்கும் உதவும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைத் தனியாகப் பரிசிலிக்க வேண்டும்.

Sculpture Training Centre, Mamallapuram

*17 *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU SAW. GANESAN): Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer to Question No. 68 on 8th February 1973—

(*a*) whether the service conditions of the staff of the Sculpture Training Centre, Mamallapuram have been revised on the lines of the Madras Educational Rules, so as to enable them to secure their pay, rights and duties, in accordance with those rules;

(*b*) if so, the cadre of the Instructors therein; and

(*c*) their scale of pay?